# சமகால இலங்கையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் முஸ்லிம்களின் பங்கு: களுத்துறை முஸ்லிம் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

M.S.F. Nisfa

Ahamed Ibrahim Kulliyyah of Laws, International Islamic University Malaysia
amna7201@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதனானவன் பாரிய இலக்கை சுமந்தவனாகவே இவ்வுலகுக்கு அனுப்பப்பட்டுள்ளான். அல்லாஹுதஆலாவினால் காலத்துக்குக் காலம் அனுப்பப்பட்ட ரஸுல்மார்கள், நபிமார்களினூடாக வேதங்களும் அருளப்பட்டன. அவை முஸ்லிம்களுக்குரிய நேர்வழிகாட்டல்களை கற்றுத் தருகின்றன. எங்கும் சமாதானம் நிலவ வேண்டும் என்றே இஸ்லாம் விரும்புகின்றது. இது குறித்து இஸ்லாம் நிறையவே பேசி இருக்கின்றது. இஸ்லாம் ஒருபோதும் வன்முறையைத் தூண்டும் மார்க்கமல்ல. வன்முறையை வன்மையாகக் கண்டிக்கும் மார்க்கம். ஆயினும் இலங்கையில் அண்மைக்காலங்களில் நடைபெற்ற சில அசம்பாவிதங்களின் விளைவாக இஸ்லாமிய மார்க்கம் கொடூரமானதாக சித்திரிக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள முஸ்லிம்களை ஏனைய மதத்தினர் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கவும் அணுகவும் முற்பட்டுள்ளனர். இணக்கமான ஒரு சூழலில் இலங்கை மக்கள் இல்லை. களுத்துறை வாழ் மக்களை இவ்வாய்வு கவனத்திற் கொண்டுஇ களுத்துறை பிரதேசத்தில் இன நல்லிணக்கததை ஏற்படுத்துவதற்கான வழிவகைகள் ஆராயப்பட்டுள்ளன. இதனூடாக முழு நாட்டிலும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்திஇ சுபீட்சம் மிக்க ஒரு நாட்டை உருவாக்குவது இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வானது முதற்தர தரவுகளான நேர்காணல், அவதானம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்கால சூழ்நிலையைப் பொறுத்தமட்டில் இலங்கையில் இனங்களுக்கிடையிலான நல்லுறவு மிகவும் கீழ்மட்டத்தில் உள்ளமையை எம்மால் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. முக்கியமாக இஸ்லாம் பற்றிய தப்பபிப்பிராயத்தை அகற்றல், முஸ்லிம்கள் தங்களுக்குள் ஒற்றுமையாக இருத்தல், அல்லாஹ்வின் உதவியை நாடுதல் என்பன போன்ற பல விதந்துரைகளும் இவ்வாய்வில் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** இன நல்லிணக்கம், களுத்துறை வாழ் மக்கள், சுபீட்சமான நாடு

## 2. ஆய்வின் அறிமுகம்

உயர்ந்த இலக்குகளுடன் வாழ்வதற்காகவே மனிதன் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டான். அவ்விலக்குகளை கற்றுக் கொடுப்பதற்காக தூதர்களையும், அவர்களினூடாக வேதங்களையும் அருளினான். இவ்வாறு இஸ்லாம் என்ற சொல் ‘ஸலாம்’ என்ற வினையடியிலிருந்து பிறந்தது. ஸலாம் என்றால் சாந்தி, சமாதானம், அமைதி என்று பொருள்படும்.

வீட்டிலும் வீதியிலும் நாட்டிலும் முழு உலகிலும் சமாதானம் நிலவ வேண்டும். மனிதனுக்கு மத்தியில் நல்லுறவு வளர்க்கப்பட வேண்டும். அன்பும் பாசமும் அரசோச்சுகின்ற சமூகமாக மனித சமுதாயம் திகழ வேண்டும். உலக மக்கள் எல்லோரும் ஐக்கியமாகவும் ஒற்றுமையாகவும் வாழ வேண்டும். அதனை உத்தரவாதப்படுத்துவதற்காக இஸ்லாம் சொல்லித் தருகின்ற மிக எளிமையான ஒரு வழிமுறைதான் ஸலாம் சொல்வதும் அதனைப் பரப்புவதுமாகும்.

இன்று முஸ்லிம் உம்மத் உலகளாவிய ரீதியிலும், உள்நாட்டு மட்டங்களிலும் நெருக்கடியானதொரு கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இஸ்லாம் பற்றிய பீதியும், அச்சமும் முஸ்லிம்கள் குறித்த வெறுப்பும், காழ்ப்புணர்வும் உலகளாவிய ரீதியில் விதைக்கப்பட்டதன் விளைவுகளை முஸ்லிம் உம்மத் கோரமாக அனுபவித்து வருகின்ற காலம் இது.

இன்று முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்கின்ற இலங்கை போன்ற நாடுகளில் உள்நாட்டு அரசியல் நிகழ்ச்சி நிரல், பிராந்திய அரசியல் நிகழ்ச்சி நிரல், சர்வதேச அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கூடான இனவாத, மதவாத மோதல்களை உருவாக்குகின்ற ஓர் அபாயகரமான சூழல் தயார்படுத்தப்பட்டு வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

பிரச்சினைகளைப் பற்றி பேசுகின்ற அதேநேரம் அவற்றுக்கான காத்திரமான தீர்வுகளைப் பற்றி அதிகமதிகம் பேச வேண்டியிருக்கிறது. அவை நடைமுறைச் சாத்தியமான, யதார்த்தமான தீர்வுகளாகவும் அமைய வேண்டும். நாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு துப்பாக்கிகளும் தோட்டாக்களும் குண்டுகளுமே பதில் சொல்லும் என்ற பார்வை யதார்த்தமானதல்ல. நடைமுறைச் சாத்தியமானதுமல்ல. நாம் எதிர்பார்க்கின்ற நல்ல விளைவுகளை தருகின்ற வழிமுறையுமல்ல. அந்த வகையில் இத்தகையதொரு நெருக்கடியான சூழ்நிலையை வெற்றிகரமாக எதிர்கொண்டு அவற்றுக்கான தீர்வுகளை கண்டு அவற்றினடியாக செயற்பட வேண்டிய தேவையும் கடப்பாடும் இருக்கிறது.

இவ்வகையில் சுபீட்சம் மிக்க, சமாதானம் மிக்க ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதில் முஸ்லிம்களின் பங்களிப்பு அளப்பரியது. இது ஒரு அடிப்படையான விடயமும்கூட. ஒவ்வொரு தனிமனிதனும் தத்தமது வீடுகளிலேயே முதலில் இதற்காக பயிற்றுவிக்கப்பட வேண்டும். அதன்பின்பே வீட்டுக்கு வெளியில் இதனைக் கற்றுக் கொள்வர். ஏனைய மதச் சகோதரர்களுடன் நல்லுறவு பேணிவாழவும் இது அவர்களுக்கு வழிவகுக்கும்.

இன்று இத்தகைய நிலைமையக் காண முடியாமல் உள்ளது. பொதுவான ஒவ்வொரு மதம் பற்றிய தப்பபிப்பிராயங்களே அவர்களுக்குள் பகிரப்படுகின்றன. ஏனைய மதத்தினருடன் பழகுவதற்கான சந்தர்ப்பங்கள் பொதுவாக பிள்ளைகளுக்கு வழங்கப்படுவதில்லை. இதனால் ஒரு மதத்தை இன்னொரு மதம் புரிந்து கொள்வதில் சிக்கல்கள் உருவாகின்றன.

இத்தகைய நிலைமைகளைச் சீர்செய்து, இஸ்லாம் காட்டிய நல்வழியின்பால் முஸ்லிம்களை வழிநடத்தி, அதன் மூலமாக இன நல்லிணக்கத்துடன் கூடிய ஒரு நாட்டை கட்டியெழுப்புவது அவசியமாகும். இதற்கான ஆலோசனைகளை முன்வைப்பதாகவே இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.

### 3. ஆய்வுப் பிரச்சினை

இலங்கை மக்கள் பல்வேறு அசம்பாவிதங்களின் பின்னர் முஸ்லிம்களை மாற்று மத சகோதரர்கள் புரிந்து கொள்ளாத நிலையில் உள்ளனர். இதனை சீர் செய்து இலங்கைவாழ் மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வழிவகைகளைக் கண்டறிதல் வேண்டும்.

### 4. ஆய்வு முறைமை

இந்தப் பண்புசார் ஆய்வுக்கான தகவல்கள் இரு வழிமுறைகளில் சேகரிக்கப்பட்டன.

**(அ) அவதானம்**

ஆய்வுப் பிரதேசத்தில் நீண்ட காலம் ஆய்வாளர்கள் வசித்துள்ள நிலையில் அவதானிக்கப்பட்ட விடயங்களின் தொகுப்பாகவே இது அமைந்துள்ளது.

**(ஆ) நேர்காணல்**

ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள புத்திஜீவிகளிடமும் சமூகத் தலைவர்களிடமும் இது தொடர்பாக நேர்காணல் செய்து பெற்ற தகவல்களும் இதற்கு உதவின.

இவ்வாறு முதற்தர தரவுகளை (Primary data) கொண்டு இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் பெறப்பட்ட தகவல்களை மையமாகக் கொண்டு சமகால இலங்கையில் இன நல்லிணக்கத்தை பேணுவதற்கு தடையாக இருக்கும் காரணிகள் தொடர்பாக கண்டறியப்பட்டது. களுத்துறை பிரதேச மக்களை இதிலிருந்து மீட்டெடுப்பதற்காக எவ்வாறான ஆலோசனைகளை வழங்கலாம் எனவும் நோக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பெறப்பட்ட சில முன்மொழிவுகள் இறுதியில் முன்வைக்கப்பட்டுள்ளன.

### 5. ஆய்வின் நோக்கங்கள்

- இலங்கைவாழ் முஸ்லிம்கள் பிற சமூகங்களுடன் நல்லுறவு பேணி வாழ்வதற்கு தடையாக உள்ள காரணிகளைக் கண்டறிதல்.
- இஸ்லாமிய அறிவுரைகளுக்கூடாக முஸ்லிம்களை இன நல்லிணக்கத்துடன் வாழ வழிவகைகளைப் பரிந்துரைத்தல்.

## 6. தற்கால இலங்கையில் சமூகங்களுக்கிடையிலான உறவின் நிலைப்பாடு

ஆயிரம் வருடங்களுக்கு மேலான வரலாற்றில் ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதலின் அளவுக்கு இலங்கை முஸ்லிம்களை நெருக்கடியில் சிக்க வைத்த மற்றுமொரு சம்பவம் இருக்காது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர். தற்கொலைக் குண்டுதாரிகளில் நிகாப் அணிந்தவர்கள் எவரும் இருக்கவில்லை. ஆனால் இப்போது முஸ்லிம் பெண்களின் ஆடை பற்றி முஸ்லிமல்லாத ஆண்களும் பெண்களும் ஆய்வுகள் செய்கிறார்கள். தற்கொலை குண்டுதாரிகளில் மத்ரஸா கல்வியை முடித்தவர்கள் எவருமில்லை. ஆனால் மத்ரஸாக்களை மூட வேண்டுமென்று அரசியல்வாதிகள் ஆர்ப்பரிக்கிறார்கள். பாரம்பரிய முஸ்லிம்கள் பிரச்சினையில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் 1915ல் அனைவரும் பாரம்பரிய முஸ்லிம்களாய் இருந்தபோது முஸ்லிம்கள் தாக்கப்பட்டதை மறந்து விட்டார்கள். பிரித்தானியரது காலம் தொடக்கம் முஸ்லிம்கள் அனுபவித்து வரும் முஸ்லிம் தனியார் சட்டம் நீக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். முஸ்லிம்கள் பௌத்த சிங்களவர்களை அவமதிப்பதாகவும், சிங்கள பௌத்த இன ஒழிப்புக்கு துணை போவதாகவும் குற்றம் சாட்டுகிறார்கள்.

நாம் பள்ளிவாசல்களில் அதான் ஒலியைக் குறைக்க வேண்டியேற்பட்டது. குத்பாவை சுருக்க வேண்டியேற்பட்டது. இஸ்லாமிய நிறுவனங்கள், அமைப்புக்கள், இயக்கங்களின் செயற்பாடுகள் முடக்கப்பட்டன. முஸ்லிம் அடையாளத்தடன் பாடசாலைகளுக்கும் காரியாலயங்களுக்கும் செல்ல முடியாதநிலை ஏற்பட்டது. வீடுகள், நிறுவனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. எமது வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. வருடக்கணக்கில் கட்டிக்காத்த இஸ்லாமிய நூல்கள், சஞ்சிகைகளை எமது கைகளாலேயே எரித்துவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

முஸ்லிம் சமூகம் பயங்கரவாதத்திற்கு எதிராக முழுமையான ஒத்துழைப்பு வழங்கியமையை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். இருந்தாலும் முழு முஸ்லிம் சமூகத்தையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தும் செயல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

30 வருடங்கள் நடைபெற்ற யுத்தத்தின் போதும்கூட அவர்களது கலாசாரங்களுக்கு ஒருபோதும் தடை விதிக்கப்படவில்லை. அவர்களது கடைகளைப் பகிஷ்கரிக்குமாறு கேட்கப்படவில்லை. அவர்களது சமய, சமூக, கலாசார அடையாளங்கள் கேள்விக்குட்படுத்தப்படவில்லை. இந்த நாட்டை 450 வருடங்கள் அடிமைப்படுத்தி ஆட்சிசெய்த போர்த்துக்கேய, ஒல்லாந்த, பிரித்தானிய கலாசாரம் அவர்கள் பரப்பிய சமயம், அவர்கள் நாடு பூராகவும் அமைத்திருந்த கோயில்கள் விமர்சிக்கப்படவில்லை.

இவ்வாறு உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம்கள் அனுபவிக்கும் இன்னல்கள் மற்றும் இக்கட்டான நிலை விமர்சிக்கப்படக்கூடியதாக உள்ளது. தாக்குதலுடன் எவ்வித தொடர்புமற்ற பல விடங்கள் குறித்து, குறிப்பாக முஸ்லிம்களின் உடை, தொழில், கல்வி போன்றவை தொடர்பில் இந்தளவு வெறுப்புணர்வோடு நோக்கப்பட காரணம் என்ன என்பது குறித்து நாம் ஆழமாக ஆராய்வது அவசியம். 450 வருடங்கள் நாட்டை அடக்கியாண்டவர்களுடன் இல்லாத அளவுக்கு, 30 வருடங்கள் நாட்டை கூறுபோட யுத்தம் செய்தவர்களுடன் இல்லாத அளவுக்கு, முஸ்லிம்கள்மீது வெறுப்பும், காழ்ப்புணர்வும், புறக்கணிப்பும், ஓரங்கட்டலும் ஏற்படக் காரணம் என்ன என்பதை காரண காரிய ரீதியாக ஆராயாதவரை இந்தப் பிரச்சினையிலிருந்து நிரந்தரமாக மீள முடியாது.

## 7. இலங்கையில் வாழும் இனங்களுக்கிடையில் நல்லுறவைப் பேணத் தடையாக இருக்கும் காரணிகள்

### 7.1 இஸ்லாம் பற்றிய தெளிவின்மை

மதங்களுக்கிடையே சரியான புரிந்துணர்வின்மை மதங்களுக்கிடையே நல்லுறவைப் பேணத் தடையாக உள்ளது. இஸ்லாம் பற்றி பிற மதத்தினர் புரிந்து வைத்திருக்கும் பிழையான அபிப்பிராயங்கள் இன நல்லுறவுக்கு தடையாக அமைந்திருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இஸ்லாம் வன்முறையைத் தூண்டும் மார்க்கம். இஸ்லாம் தீவிரவாதத்தை

ஆதரிக்கின்றது. இஸ்லாம் போராட்ட குணத்தை ஊக்குவிக்கின்றது என பிற மதத்தினர் தப்பபிப்பிராயம் கொண்டுள்ளனர்.

மேலும் இஸ்லாம் பற்றிய சரியான புரிதல் இல்லாமையால் அவர்கள் முஸ்லிம்களுடன் பழகும் விடயத்தில் சற்று அவதானமாக உள்ளனர்.

**7.2 தொடர்தேச்சையான கசப்பான அனுபவங்கள்**

அண்மைக்காலமாக நடைபெற்ற சில தொடர்தேச்சையான அனுபவங்களின் மூலமாக ஏனைய மதத்தினர் முஸ்லிம்கள்மீது சில தப்பான அப்பிப்பிராயங்களைக் கொண்டுள்ளனர். ஏப்ரல் மாதம் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஒரு கரிநாளாக இலங்கை வரலாற்றில் பதியப்பட்டுவிட்டது. நாட்டு மக்கள் அனைவரையும் பேரதிர்ச்சியிலும், பெரும் துயரத்திலும் ஆழ்த்தியுள்ள காட்டுமிராண்டித்தனமான குண்டுத் தாக்குதல்களின் கோர விளைவுகளால் நாடு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கிறது.

மேலும் அண்மைக்காலமாக நடைபெற்று வரும் இனக்கலவரங்கள் இனங்களுக்கிடையிலான வெறுப்புணர்வை அதிகரித்துள்ளது. சிங்கள இனக்குழுக்கள் முஸ்லிம்களை இலக்கு வைத்து தாக்குவதும், பொருளாதார நிலையங்களுக்கு தீ வைப்பதும், அவற்றை அழிப்பதும் என பல்வேறபட்ட அநியாயங்களை இழைத்து வருகின்றனர். இதனால் முஸ்லிம் சமூகத்தினர் சிங்களவரை வெறுப்பதும், சிங்கள இனத்தினர் சில தப்பான அபிப்பிராயங்களின் காரணமாக முஸ்லிம்களை வெறுப்பதும் என இந்நிலை தொடர்ந்த வண்ணமே உள்ளது.

**7.3 முஸ்லிம்கள் தனித்துவமானவர்கள்**

முஸ்லிம்கள் உணவு, உடை விடயத்திலும், திருமணம் சம்பந்தப்பட்ட விடயங்களிலும் ஏனைய மதத்தினரை விடவும் வித்தியாசமான சில கோட்பாடுகளை கொண்டுள்ளதனால் அவர்கள் முஸ்லிம்களை தவறாக எண்ணுகின்றனர்.

**8. சமூகங்களுக்கிடையிலான நல்லுறவைப் பேண முஸ்லிம்கள் ஆற்ற வேண்டிய பணிகள்**

**8.1 இஸ்லாம் பற்றிய தப்பிப்பிராயத்தை அகற்றல்**

இஸ்லாம் என்ற சொல்லே ‘ஸலாம்’ அதாவது சாந்தி, சமாதானம், அமைதி என்பன போன்ற வினையடியிலிருந்து பிறந்தது. எங்கும் சமாதானம் நிலவ வேண்டும் என்றும், மனிதர்களுக்கு மத்தியில் நல்லுறவு வளர்க்கப்பட வேண்டும் என்றுமே இஸ்லாம் விரும்புகின்றது. அனைவரும் ஐக்கியமாக வாழ வேண்டும். முஸ்லிமான ஒருவர் பிறரைச் சந்திக்கும்போது ஸலாம் கூறவேண்டும். அதாவது ‘உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும்’ என கூறுவது ஸுன்னா. இதனை நபி (ஸல்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியுள்ளார்கள். ‘‘ஏழைகளுக்கு உணவளிப்பீராக: அறிமுகமானவருக்கும் அறிமுகமில்லாதவருக்கும் ஸலாம் சொல்வீராக’’ என்றார்கள் ரஸூல் (ஸல்) அவர்கள்.

இஸ்லாத்தில் வன்முறைக்கு இடமில்லை. கடும்போக்கை கண்டிக்கும் மார்க்கம் இஸ்லாம். எல்லா விடயங்களிலும் மென்மையான போக்கு, சமாதான வழிமுறை, இனிமையான அணுகுமுறை கடைபிடிக்கப்படுவதையே அல்லாஹுத்தஆலா விரும்புகின்றான் என்ற விடயத்தை நாம் உணர்த்த வேண்டும்.

பிறரை அச்சுறுத்துவது, பிறருக்கு நோவினை புரிவது இஸ்லாமிய கண்ணோட்டத்திலே கொடிய பாவமாகும். ஒரு முஸ்லிம் எந்த வகையிலும் அடுத்த ஒரு மனிதனுக்கு தொந்தரவாக இருக்க முடியாது. பிறரை கேவலப்படுத்துபவராக, இழிவுபடுத்துபவராக இருக்க முடியாது என கூறுகின்றது இஸ்லாம்.

முஸ்லிமாகவோ முஸ்லிமல்லாதவராகவோ யாராக இருந்தாலும் அல்லாஹ்வின் படைப்பு என்ற வகையில் அனைவருக்குமான பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துபவர்கள்தான் உண்மையான இறைவிசுவாசிகள் என கூறுகின்றது நபியவர்களது ஹதீஸ்.

**8.2 இலக்கை அடைவதற்கான வழிமுறைகள் புனிதமானவையாக இருக்க வேண்டும்**

இஸ்லாத்தில் வன்முறைக்கு இடமில்லை. வன்முறையின் மூலம் எதனையும் சாதிக்க முயற்சிக்க கூடாது. எந்தவோர் இலக்கை அடைவதற்கம் அமைதியான, சமாதான வழிமுறைகளையே ஒரு முஸ்லிம் கையாள வேண்டும். நியாயமான நேர்மையான வழிகள் மூலமே எதையும் சாதிக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் வழிகாட்டல்.

எமது இலட்சியங்கள் புனிதமானவையாக இருப்பதுபோல, அவற்றை அடைவதற்கான வழிமுறைகளும் அணுகுமுறைகளும் தூய்மையானவையாக, புனிதமானவையாக, சத்தியத்தின் அடிப்படையில் அமைந்தவையாக இருக்க வேண்டும் என்பதே இஸ்லாத்தின் நிலைப்பாடு.

இலக்கு புனிதமானது என்ற காரணத்தினால் அதனை அடைவதற்கான வழிமுறைகள் எப்படியும் அமையலாம் என்று இஸ்லாம் கூறவில்லை. நற்பணியொன்றைச் செய்யும்போது அதனை பிழையாகவோ, முறைகேடாகவோ, நியாயமற்ற வழிமுறைகளைக் கையாண்டோ மேற்கொள்வதற்கு இஸ்லாத்தில் அனுமதியில்லை. இஸ்லாம் தூய்மையான மார்க்கம். அதனை ஏற்றுக் கொண்டவர்கள் தூய்மையாகவே நடந்து கொள்ள வேண்டும்.

அரசியல், பொருளாதாரம், சமூகவியல், ஊடகத்துறை என்ற எந்தத் துறையாக இருந்தாலும் ஒவ்வொரு துறைக்குமுள்ள தர்மங்கள், ஒழுக்கங்கள், ஆன்மீக தார்மீக விழுமியங்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகின்றது. சமூகத்தின், நாட்டின் அமைதிக்கு பங்கம் விளைவிக்கககூடிய எந்த நடவடிக்கையிலும் ஒரு முஸ்லிம் ஈடுபடக் கூடாது. தனி மனிதர்களுக்கிடையில், குடும்பங்களுக்கிடையில், சமூகங்களுக்கிடையில், இனங்களுக்கிடையில் குரோதத்தையும், பகைமையையும் விதைக்கும் எந்தவொரு காரியத்திலும் ஓர் இறைவிசுவாசி ஒருபோதும் ஈடுபட முடியாது. ஒரு சில லௌகீக அற்ப இலாபங்களுக்காக இத்தகைய பிழையான வழிமுறைகளைக் கையாள்வதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது.

**8.3 ஒரு முஸ்லிம் எப்போதும் ஒற்றுமையையே விதைக்க வேண்டும்**

மனிதர்களுக்கு பயனளிக்கும் செயல்களில் ஈடுபடுவது, அவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் விடயங்களை அகற்றுவது போன்றே முரண்பட்டுக் கொள்ளும் மனிதர்களுக்கு மத்தியில் சமாதானத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தும் உன்னத பணியிலும் ஒரு முஸ்லிம் ஈடுபட வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

மு.்.மின்களிடம் சகோதரத்துவம் நிலவ வேண்டும். அவர்களது வாழ்வில் அன்பும் மகிழ்ச்சியும் மலர வேண்டும் என்றே நபி (ஸல்) அவர்கள் விரும்பினார்கள். அதனால் அது குறித்த போதனைகளுக்கு மிகுந்த முக்கியத்துவமளித்து மனிதர்களுக்கு மத்தியில் கோபத்தீ மூளும் போதெல்லாம் அதை அணைத்து விடுவதற்கான வழிமுறையைக் கற்றுத் தந்தார்கள்.

முஸ்லிம்களாகிய நாம் எமக்கு மத்தியில் ஒற்றுமையை பலப்படுத்த வேணடும். முஸ்லிம் சமூகம் ஈயத்தினால் வார்க்கப்பட்ட ஒரு கட்டிடத்தைப் போல ஐக்கியமாக ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்கக் கூடாது. குறை சொல்வதும், சாடுவதும், வசை பாடுவதும், பரஸ்பரம் குற்றச்சாட்டை சுமத்துவதும் முழு முஸ்லிம் சமூகத்தையும் பலவீனப்படுத்தும். எனவே பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் ஓர் அணியில் நிற்பது அவசியமாகும்.

**8.4 இஸ்லாத்தில் வதந்திகளுக்கு இடமில்லை**

ஒரு சமூகததின் அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தக்கூடிய, மனிதர்களுக்கிடையிலான சுமுகமான உறவைப் பாதிக்கக்கூடிய அனைத்து காரியங்களும் இஸ்லாத்தில் தடுக்கப்பட்டவை. குறிப்பாக மனிதர்களுக்கு மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய வதந்திகளைப் பரப்புவது இஸ்லாத்தின் பார்வையில் மிகப் பெரிய குற்றமாகும். வதந்தி பரப்புவதை அல்குர்ஆன் வன்மையாக கண்டிக்கிறது. இதற்கு மிகப் பெரிய சான்றாக ஸூரதுல் ஹுஜுராதின் 6வது வசனம் அமைகிறது.

**8.5 தீய பழக்கங்களிலிருந்து தவிர்ந்திருத்தல்**

இஸ்லாம் எந்த சந்தர்ப்பத்திலும் யாரையும் கேவலப்படுத்துவதை, பரிகசிப்பதை, இழிவுபடுத்துவதை அனுமதிப்பதில்லை. அது ஈமானக்கு எதிரான பண்பும்கூட.

எமது தொழுகைகள், நோன்புகள், திக்ர் அவ்ராதுகள், நாம் ஓதுகின்ற அல்குர்அன் திலாவதுகள் மூலம் நாம் சேமிக்கும் நன்மைகள் அனைத்தும் இத்தகைய மோசமான கெட்ட குணங்களால் பாழாகிவிடும் என்பதை ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

தப்பெண்ணம் கொள்வது, சந்தேகப்படுவது ஈமானுக்கு முரணான ஒரு பண்பாகும் என்கின்றது ஸூரா ஹுஜுராதின் 12வது வசனம்.

**8.6 ஏனைய மத்தினருடனான கலந்துரையாடலின்போது அமைதி பேணல்**

இஸ்லாம் மோதலை எதிர்பார்க்கின்ற மார்க்கமல்ல. கலந்துரையாடல், பேச்சுவார்த்தை ஊடாக எந்தவொரு பிரச்சனையையும் தீர்க்கலாம், தீர்க்க வேண்டும் என வலியுறுத்துகின்ற மார்க்கம் இஸ்லாம்.

கலந்துரையாடல்களுக்கூடாக முரண்பாடுகளைக் களையலாம் அல்லது குறைக்கலாம். பல விடயங்களில் உடன்பாடு காணலாம். ஆனால் கலந்துரையாடல்களுக்குரிய ஒழுங்குகள் பேணப்பட வேண்டும். இவ்வாறு ஒழுங்குகள் பேணப்படும் பட்சத்திலேயே எந்தப் பெரிய விவகாரமாயினும் நல்ல தீர்வுகளைப் பெற முடியும். நல்ல உடன்பாட்டுக்கு வர முடியும்.

கலந்துரையாடல் எப்போதும் உண்மையை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும். பொய், புரளி, பழி சுமத்தல், அபாண்டம் என்பவற்றை அடிப்படையாக கொண்டதாக இருக்க கூடாது. கலந்துரையாடலின்போது பண்பாடு பேணப்பட வேண்டும். நபி (ஸல்) அவர்களின் முக்கிய பண்பாக இது காணப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் எப்போதும் கெட்ட, தரக்குறைவான வார்த்தைகளைப் பேச மாட்டார்கள்.

அல்லாஹ்வின் பாதையின் பக்கம் மக்களை அறிவோடு, ஞானத்தோடு, பண்பாடாக, நல்ல உபதேசங்கள் மூலம் அழைக்க வேண்டும். விவாதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் மிகச் சிறந்த அழகான முறையில் பேச்சு வார்த்தையை, கலந்துரையாடலை, விவாதத்தை அமைத்துக் கொள்ள வேண்டும்.

எதிர்த்தரப்பினருடைய கருத்து சரியாக, பொருத்தமாக, நியாயமாகத் தெரிகின்றபோது துணிச்சலாக அதனை செவிமடுப்பதும் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டத்தில் ஏற்றுக் கொள்வதுமே அல்குர்அன் காட்டும் வழிமுறையாகும்.

**8.7 பிற சமூகத்தினருடைய இன்ப துன்பங்களில் கலந்து கொள்ளல்**

ஏனைய மத்தினருடைய இன்ப துன்பங்களில் கலந்து கொள்வது இன நல்லினக்கத்தின் மிக முக்கிய விடயமாகும். அத்துடன் முஸ்லிம்களது வைபவங்கள், கொண்டாட்டங்கள், நிகழ்வுகள் என்பவற்றில் கலந்து கொள்வதற்கு பிற சமயத்தவர்களை அழைக்க வேண்டும். அவர்களை உபசரிக்க வேண்டும். அதேபோல பிற சமயத்தவர்களின் பொது நிகழ்வுகளில் நாம் கலந்து கொள்ள வேண்டும். அவர்களது பொதுக் கொண்டாட்டங்களில் அவர்களை வாழ்த்தவும், அன்பளிப்புக்களை வழங்கவும் வேண்டும்.

பிற சமயத்திலுள்ள அநாதைகள், ஏழைகள், அங்கவீனர்கள் போன்றோருக்கு உதவிக்கரம் நீட்ட நாம் முன்வர வேண்டும். இதனால் அவர்கள் இஸ்லாத்தின் சிறந்த கொள்கைளை உணர வாய்ப்பு கிடைக்கும்.

**8.8 பொது வேலைகளில் பிற சமயத்தினரோடு கைகோர்த்தல்**

பொது சிரமதானங்கள், சூழல் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகள், தீமை ஒழிப்பு போராட்டங்கள் முதலியவற்றில் பிற மதத்தவர்களோடு சேர்ந்து நாம் முனைப்போடு

பங்கெடுக்க வேண்டும். வைத்தியசாலைகள், மடங்கள் முதலானவற்றுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டும்.

**8.9 இஸ்லாமிய கொள்கைகளை வெளிப்படுத்தல்**

பிற சமயத்தவர்கள் விரும்பும்போது எமது பள்ளிவாசல்களைப் பார்வையிடவும், சன்மார்க்க நிகழ்வுகளை அவதானிக்கவும் வழிவகை செய்ய வேண்டியது முஸ்லிம்களாகிய எமது பொறுப்பாகும். இதனூடாக இஸ்லாம் பற்றிய பல்வேறு வகையான தப்பிப்பிராயங்கள் களையப்படலாம்.

**8.10 பிற மதங்களை மதித்தல்**

பிற மதங்களுக்கு அவற்றுக்குரிய மரியாதையை அளிப்பது மிக அவசியமாகும். அவர்களது மத உணர்வை மதித்து நடக்க நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்களது மதத்தலங்களை நாசம் செய்ய நாம் எண்ணல் கூடாது. இது இஸ்லாமிய வழிமுறைக்கு மாற்றமானது.

**8.11 நாணயமாக நடந்து கொள்ளல்**

வியாபார கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுபவர்கள் நம்பிக்கை நாணயத்தோடு நடந்து கொள்வதோடு மாத்திரமின்றி, தாராளத்தன்மையோடும் நடந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். பணத்தை எப்போதும் சம்பாதித்துக் கொள்ளலாம். இங்கு அவர்களது நன்மதிப்பை பெறுவதே மிக முக்கியமானது.

**8.12 முன்மாதிரி முஸ்லிமாக நடந்து கொள்ளல்**

விழாக்கள், வைபவங்கள், பொது நிகழ்ச்சிகளின்போது எளிமையைக் கடைபிடிக்க முஸ்லிம்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆடம்பரத்தையும், படாடோபத்தையும் தவிர்ப்பது இன்றைய காலத்தின் தேவையும் சன்மார்க்கக் கடமையுமாகும். பிற சமயத்தவரோடு பழகி, பிற சமூகத்தில் முஸ்லிம்கள் பற்றி நிலவுகின்ற தப்பபிப்பிராயங்களை சொல்லாலும் செயலாலும் நல்ல முன்மாதிரிகளாலும் களைய நாம் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் முன்மாதிரி மிக்கவர்களாக இருக்க வேண்டும். ஆயிரம் பேர் சேர்ந்து தமது பேச்சினால் ஒரு மனிதனில் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தைவிட ஒரு மனிதன் தன் முன்மாதிரியான வாழ்க்கையினால் பத்தாயிரம் பேரில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

பேச்சு, விரிவுரை, பயான் இவை அனைத்தையும்விட முன்மாதிரியான வாழ்க்கை மிகப் பெரிய தாக்கத்தை, மாற்றத்தை, விளைவை ஏற்படுத்தும் என்பதனை ஆழமாகப் புரிந்து கொண்டு முன்மாதிரியாக வாழக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆண்கள், பெண்கள், யுவதிகள், இளைஞர்கள், சமுதாயத் தலைமைகள் அனைவரும் சமூகத்தில் முன்மாதிரியாகவும், உயர்ந்த பண்பாடுகளைப் பேணியும் வாழ வேண்டிய ஒரு காலம் இதுவென்றால் அது மிகையாகாது. அந்த வகையில் எமது தாய்நாடான இந்நாட்டில் அமைதி, நிம்மதி, சாந்தி, சமாதானம் நிலவுவதற்காக எமக்கு மத்தியிலுள்ள கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள் என்பவற்றை அழகான கலந்துரையாடல்களின் ஊடாக, பேச்சு வார்த்தைகளின் ஊடாகத் தீர்த்துக் கொள்வதற்கும் களைவதற்கும் முயற்சிக்கின்ற அதேநேரம் அடுத்த சமூகங்களுக்கு உதவிக் கரம் நீட்டுபவர்களாக சகவாழ்வுக்கு வரைவிலக்கணமாக நாம் மாறக் கடமைப்பட்டுள்ளோம்.

**8.13 இளம் தலைமுறையினரை வழிப்படுத்தல்**

இளம் தலைமுறையினரை சக வாழ்வைப் பேணி வாழுமாறு நெறிப்படுத்தவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். நமது அடிப்படையான மார்க்க நம்பிக்கைகளைப் பேணிய நிலையில் இத்தகைய நல்லுறவை வளர்ப்பது எமக்கு முன்னாலுள்ள மிகப் பெரிய சவாலாகும்.

### 8.14 அல்லாஹ்வின் உதவியை நாடுதல்

முக்கியமாக இன நல்லுறவுக்காக அல்லாஹ்வின் உதவியை நாட வேண்டும். அந்த வகையில் பாவங்களிலிருந்து நாம் விடுபட வேண்டும். தனிப்பட்ட, குடும்ப, சமூக உறவுகளில், கொடுக்கல் வாங்கல் போன்றவற்றில் நாம் இழைக்கும் தவறுகள், பிழைகள் அனைத்திலும் விடுபட வேண்டும். பாவங்கள் மலிந்திருக்கும் இடத்தில் பல்வேறு பிரச்சினைகளும் சோதனைகளும் சூழ்ந்திருக்கும் என்பதை நாம் கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டும். ஒரு மு.'.மினுடைய மிகப் பெரிய ஆயுதமாக இருப்பது பிரார்த்தயையாகும். எனவே எமது நாட்டில் வாழுகின்ற எல்லா சமூகங்களுக்கும் மத்தியில் சமாதானமும் நல்லிணக்கமும் நிலவ பிரார்த்திக்க வேண்டும்.

### 8.15 சிங்கள மொழிப் புலமையுள்ள ஆளுமைகளை உருவாக்கல்

சிங்கள மொழியில் உரையாற்றுகின்ற, எழுதுகின்ற, கலந்துரையாடல்களை நடத்துகின்ற, ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்கின்ற வளவாளர்கள் உருவாக்கப்படல் வேண்டும். எமது அழைப்பாளர்களும், பிரசாரகர்களும் தமது கருத்துக்களை முன்வைக்கும் பாரம்பரிய முறைகளை மாற்றி, சிங்கள மொழியில் இஸ்லாத்தின் தூதை, முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாடுகளை முன்வைக்கின்ற தார்மீக கடப்பாடு இருக்கிறது.

## 9. கண்டறிந்தவை

களுத்துறை பிரதேசத்தில் காலம் காலமாக முஸ்லிம்கள் பிற சமூகத்தவரோடு கலந்து வாழுகின்ற போதிலும், இன்றைய கால சில கசப்பான சம்பவங்களினால் அவர்களுக்குள் விரிசல் ஏற்பட்டு, நல்லுறவு பேணி அவர்கள் வாழத் தடையாக உள்ளது. சமூகப் பொறுப்பு மிக்க தலைவர்கள் மட்டுமன்றி ஒவ்வொரு தனிமனிதனும் இது விடயத்தில் கரிசனை கொண்டு இனங்களுக்கிடையே நல்லுறவை வளர்ப்பதற்காக பாடுபடுவதன் மூலம் எமது நாட்டில் சிறந்ததொரு மாற்றத்தைக் கொண்டுவர முடியும்.

## 10. ஆய்வு முடிவுரை

இஸ்லாம் அனைத்து சமூகங்களுடனும் சகோதரத்துவப் பண்புடன் வாழுமாறு முஸ்லிம்களை பணிக்கின்றது. ஆயினும் தற்கால சூழ்நிலையைப் பொறுத்தமட்டில் இலங்கையில் இனங்களுக்கிடையிலான நல்லுறவு மிகவும் கீழ்மட்டத்தில் உள்ளமையை எம்மால் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. பெரும்பாலும் இஸ்லாம் பற்றிய தப்பான அபிப்பிராயங்களே அவர்களது மனங்களில் பதிந்து விட்டன. மேற்கூறப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் முஸ்லிம் சமூகத்தை மாற்றுவதற்கான வழிவகைகளை செயற்படுத்துவதன் ஊடாக இனங்களுக்கடையில் நல்லறவு பேணி சிறந்ததொரு நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியும்.

## உசாத்துணைகள்


1. அகார் முஹம்மத். ஏ.ஸி., (2019), **“மிம்பர் மேடை”,** கொழும்பு: அல்ஹஸனாத் பப்ளிகேஷன்
2. அகார் முஹம்மத். ஏ.ஸி., (2019), தேசத்தை கட்டியெழுப்புவதில் ஒரு முஸ்லிமின் வகிபங்கு, **“அல்ஹஸனாத்”,** மலர்:45, இதழ்:07, கொழும்பு: இலங்கை ஜமாத்தே இஸ்லாமி
3. அஸீஸ். ஏ.எம்.ஏ, (2007), **“இலங்கையில் இஸ்லாம்”,** கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.
4. கியாஸ் முஹம்மத், (2019), தேசத்தை நேசித்தல், **“அல்ஹஸனாத்”,** மலர்:45, இதழ்:07, கொழும்பு: இலங்கை ஜமாத்தே இஸ்லாமி
5. ஹஸன் இக்பால், (2019), சகோதரர்களே வாருங்கள் ஒன்றிணைவோம், **“அல்ஹஸனாத்”,** மலர்:45, இதழ்:05-06, கொழும்பு: இலங்கை ஜமாத்தே இஸ்லாமி
6. ஹஸன் இக்பால், (2019), நாட்டை கட்டியெழுப்பும் பயணத்தில் அவர்களும் நாமும், **“அல்ஹஸனாத்”,** மலர்:45, இதழ்:07, கொழும்பு: இலங்கை ஜமாத்தே இஸ்லாமி

7. ஜெம்ஸித் அஸீஸ், (2019), தீவிரவாதத்தை துடைத்தெறிவதில் முஸ்லிம் சமூகம், **"அல்ஹஸனாத்",** மலர்:45, இதழ்:05-06, கொழும்பு: இலங்கை ஜமாத்தே இஸ்லாமி

**நேர்காணல்**

1. அனஸ். எம்., (ஆசிரியர்), 2019.09.06, நேரம்: பி.ப 4.00-5.00, பேருவளை.
2. ஆயிஷா. எம்.எஸ்., 2019.08.25, நேரம்: மு.ப 10.00-11.30, தர்கா நகர்.
3. மிர்ஸுக். எம்., (பேருவளை பிரதேச காதி நீதிபதி), 2019.09.01, நேரம்: 1.00-2.00,மக்கொனை.
4. ஸமீனா. எப்., 2019.08.25, நேரம்: மு.ப 10.00-11.00, களுத்துறை.
5. ஸஸ்னா. ஏ.எல்.எப்., 2019.09.10, நேரம்: பி.ப 5.00-7.00,களுத்துறை.